Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# திருநல்லூர் கல்யாண சுந்தரேஸ்வரர் கோயில் - மாடக் கோயில்

**ப. விமலநாயகி**

**முனைவர் பட்டஆய்வாளர் சிற்பத் துறை**

**தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.**

**ஆய்வுச் சுருக்கம்**

தற்போதைய திருவாரூர் மாவட்டம் , வலங்கைமான் வட்டத்தில் அமைந்துள்ள திருநல்லூரில் முற்காலச் சோழ மன்னன் கோச்செங்கண்ணனால் எழுப்பப்பட்ட மாடக் கோயிலான கல்யாண சுந்தரேஸ்வரர் திருக்கோயிலைப் பற்றி வரலாற்று ஆய்வு முறையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:**

மாடக்கோயில், கட்டுமலை, நிறம் மாறும் சுயம்புலிங்கம், தலவரலாறு, நாயன்மார்கள் வழிப்பட்ட தலம், மாசிமக சிறப்பு, கல்யாண பரிகாரத்தலம்.

**முன்னுரை:**

திருநல்லூர் என்ற இவ்வூரானது சோழ மன்னர்கள் காலத்தில் சிறந்து விளங்கிய நகரமாக இருந்திருந்தமையைப் பல்வேறு ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் மற்றும் திருஞான சம்பந்தரால் தேவார பாடல் பெற்ற திருத்தலமாகவும், பிற்காலச் சோழர்கள் காலச் சிறப்பான நகரமாகவும் இவ்வூர் அமைந்திருந்தது.

**மூர்த்தி : கல்யாண சுந்தரேஸ்வரர், பஞ்சவர்ணேஸ்வரர்,**

**தாயார் : கல்யாண சுந்தரி - கிரிசுந்தரி**

**தலம் : திருநல்லூர்**

**தீர்த்தம்:சப்த சாகர தீர்த்தம்**

**அமைவிடம் : பாபநாசம் தலத்திற்குக் கிழக்கே 5 கி.மீ தொலைவு**

**(கும்பகோணம் - வலங்கைமான்-பாபநாசம் சாலை)**

இக்கோயிலைப் பற்றிய தலபுராணம், சுவடிகள், கல்வெட்டுகள், சிற்பங்கள், சிலைகள், கோயில் கட்டுமானம், இலக்கியங்கள், நீர்நிலைகள் முதலியவற்றைக் கொண்டு இக்கோயிலாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திருநல்லூர் தலபுராணம்:**

சுந்தரகிரி மகாத்மியம் என்ற பெயரில் திருநல்லூருக்கு பைங்காநாடு கணபதி சாஸ்திரிகள் வடமொழியில் புராணம் செய்தார். இந்நூல் 28 சுருக்கங்களையும் 1424 சுலோகங்களையும் உடையது. இப்புனிதத் தலத்தின் சிறப்பை சிவபெருமான் முருகனுக்கும், முருகன் நந்தி தேவருக்கும், நந்திதேவர் சனற்குமாரருக்கும், சனற்குமாரர் வியாசருக்கும், வியாசர் பிற முனிவர்களுக்கும் எடுத்துரைத்தனர் என இப்புராணம் கூறுகின்றது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

' இலக்கண விளக்கம்' என்ற அரிய நூலை எழுதிய திருக்கமலை (திருவாரூர்) வைத்தியநாத தேசிகர் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் இப்புராணத்தைத் தமிழில் இயற்றினார். 27 சருக்கக்களையும் 1013 விருத்தங்களையும் கொண்ட இந்நூல் கி.பி. 1908-ல் அச்சிடப்பட்டது. 1979 இல் தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம் அடிக்குறிப்புகளுடன் இந்நூலைப் பதிப்பித்தது.

**இலக்கியங்களில் நல்லூர்**

தேவாரம், பெரியபுராணம், திருத்தொணடர் புராணசாரம் மற்றும் திருப்புகழ் என பல நூல்களிலும் நல்லூர் கல்யாண சுந்தரரேஸ்வரர் போற்றப்படுகிறார்.

**கட்டடக்கலை மாடக்கோயில் :**

இம்மாடக்கோயில் அமைப்பானது, யானை ஒன்று, கருவறை மூலலிங்கத்தின் இருப்பிடத்தைச் சென்றடையாவண்ணம் பல படிக்கட்டுகளுடன் உயர்ந்து நிற்கிறது. நேர் வாயிலின்றி மருங்கோர் வாயிலுடன் அமைந்துள்ளது.

திருஞான சம்பந்தர் தம் தேவாரப்பதிகத்தில் திருநல்லூர் மாடக்கோயிலைப் பற்றி கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.


**" திருநல்லூர் மலைமல்கு கோயிலே ஆக மகிழ்ந்திரே**[1]

**திருநல்லூர் மல் ஆர்ந்த கோயிலே கோயில் ஆக மகிழந்தீரே"** [2]


இப்பதிகத்தின் மூலம் ஞானசம்பந்தர் காலத்திலேயே இம்மாடக் கோயில் உள்ளதை அறிய முடிகிறது. இதுபோன்ற மாடக்கோயில்கள் ஆவூர், குடவாசல், கீழ்வேளூர், தேவூர் வலிவலம் போன்ற 70 இடங்களில் அமைந்துள்ளன.[3]

இத்திருக்கோயில்சற்றேறக்குறையஓர் ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. மூலவர் வீற் றிருக்கும் கருவறை கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறையைத் தொடர்ந்து அர்த்த மண்ட பம், முகமண்டபம், மகாமண்டபம் காணப்படுகிறது.முகமண்டபத்தை ஒட்டி மகாமண்டபத்தின் வல ப்புறம் கருவறை மற்றும் அர்த்த மண்டபத்துடன் கூடிய அம்மன் சன்னதி அமைந்துள்ளது.


இச்சன்னதியை தொடர்ந்து வழிபாட்டுத் திருமேனிகள் உள்ள பள்ளியறை காணப்படுகிற து.மாடக்கோயில் என்ற அமைப்பில் இவை அனைத்தும் தரைமட்டத்திலிருந்து சுமார் 15 அடி உயரம் உள்ள மேல்தளத்தில் காணப்படுகிறது. கீழ்த்தளத்தில் இருந்து மாடக்கோயில் கருவறைக்கு செல்லசுமார் 25படிக்கட்டுகள்உள்ளன.கீழ்தளத்தில் உள்ள திருச்சுற்றின் நான்கு புறமும் மண்டபங் கள் அமைந்துள்ளன. திருச்சுற்றின் தென்புறம் சோமாஸ்கந்தர் சன்னதி உள்ளது. அதனையடுத்து, உள்திருச்சுற்றின் தெற்கில் 63 நாயன்மார்களின் ஒன்றரை அடி உயர சிலைகள் வரிசையாக அமைக்கப்பட்டுள்ளன.தென்மேற்கு மூலையில்சப்தமாதர் படிமங்கள்அமைக்கப்பட்டுள்ளன. வடப்பு றம் சண்டிகேஸ்வரர் சன்னதி தனிவிமானத்துடன் காணப்படுகிறது. இத்திருச்சுற்றாலையானது நான்கு புறமும் சுமார் 30 அடி உயரமுடைய மதில்களால் சூழப்பட்டுள்ளது. திருச்சுற்றின் முகப்பு ப் பகுதியில் மையக் கோயிலின் உள்கோபுரம் அமைந்து உள்ளது.


முதல் கோபுர வாயில்

கட்டடக்கலை


மாடக்கோயிலின் மாடிப்படிகள்
மாடக்கோயில் விமானம்


உட்பிரகார உயர்ந்த மதில் சுவர்


திருக்கோயில் வரைபடம்

உள் கோபுரத்தைத் தொடர்ந்து வெளித்திருச்சுற்று அமைந்துள்ளது மூலவரை நோக்கியவாறு நந்திகேஸ்வரர் படிமம் அமைக்கப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து பலிபீடமும் கொடிமரமும் காணப்படுகின்றன. வெளிச்சுற்றின் தென்புறத்தில் அஷ்டபுஜ மகா காளி சன்னதி வடக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இக்கோயிலின் மேற்கு திசையில் ஒரு நுழைவு வாயில் கோபுரம் காணப்படுகிறது.

திருக்கோயிலின் முதல் கோபுரம் கிழக்கு நோக்கியவாறு அமைக்கப் பட்டுள்ளது. இக்கோபுரம் பல்வேறு கலை வேலைப்பாடுகளுடன் காட்சி அளிக்கின்றது. வெளிச்சுற்றாலை சுமார் 13 அடி உயரமுடைய நந்திகளுடனான மதில் சுவர்களால் நாற்புறமும் சூழப்பட்டுள்ளது. கோயிலின் எதிர்புறம் சப்த சாகர தீர்த்தம் என்றழைக்கப்படும் திருக்குளம் அமைந்துள்ளது.

**கருவறை**

இக்கருவறையில் மூன்றரைக்கு இரண்டு அடி என்ற நீள் சதுர வடிவில் ஆவுடையும் அதன்மேல் 2 அடி உயர பாணலிங்கமும் உள்ளது. இம்மூலவர் சுயம்பு லிங்கம் என்றழைக்கப்படுகிறது. இதன் மேற்குச் சுவரில் கல்யாண சுந்தரர் கிரிசுந்தரி படிமங்கள் சுதைவடிவில் காணப்படுகிறது. விஷ்ணுவும் , பிரம்மாவும் திருமணத்தை நடத்தி வைக்கும் நிலையில் சுதை படிமங்களாக உள்ளனர்.

கருவறையைச் சுற்றிலும் சாந்தார அமைப்பு போன்று சுற்றுப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. அதன் மேல்பகுதி கருவறைச் சுவற்றையும் (அதாவது வெளிச்சுவர், உட்சுவர் என்ற இரு அமைப்பாலான இரட்டைச் சுவர்) திருச்சுற்றுச் சுவரையும் சுமார் 15 அடி உயரத்தில் இணைக்கும்படி அமைக்கப்பட்டுள்ளது.

**அதிட்டானம்:**

மாடக்கோயிலான இக்கோயிலின் கீழ்தளத்தில் உபானம் எனப்படும் உபபீடம் பகுதி மண்ணில் புதைந்த நிலையில் காணப்படுகிறது. தொடர்ந்துவரும் ஜகதி மற்றும் வட்டக்குமுதம் பகுதிகளில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. குமுதத்தைத்தொடர்ந்து யாளி வரிசையும், அதனையடுத்து சுவர்க்கண்டமும் உள்ளது சுவர்க்கண்டத்தைத் தொடர்ந்து கபோதப்பகுதியும் இடையிடையே சிறுசிறு இடைவெளியில் சிங்கமுக கூடு அமைப்பும் காணப்படுகிறது. அதன்மேல் சிறு வேதிகை அமைப்பு உள்ளது. இவ்வாறாக கருவறை அதிட்டானப்பகுதி பல்வேறு உறுப்புகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

**சுவர்ப்பகுதி:**

அதிட்டானத்தின் மேல் உள்ளஅமைப்புக்கு கால் (அல்லது) சுவர்ப்பகுதி எனப்பெயர் இப்பகுதி வெற்றுச் சுவராக இருந்தால் அழகாக இருக்காது என்பதால் ஆங்காங்கே தேவக்கோட்டங்களும் அரைத்தூண்களும் அலங்கரிக்கின்றன.தேவக் கோட்டமானது கலசம், கண்டம், கும்பம் போன்ற அமைப்புகளுடன் காணப்படுகிறது. தேவக்கோட்டத்தின்மேல் சாலை அமைப்பும், அதன்மீது ஒரு

ஸ்தூபியைக் கொண்ட சிறுவிமான அமைப்பும் காணப்படுகிறது. இவ்வமைப்புக்கு மஞ்சவிமானம் என்று பெயர் இந்த மஞ்சவிமான அமைப்பானது விக்கிரமசோழன் (1118 1135) காலத்தில் தொடங்கியது எனலாம்.

**தேவக்கோட்டங்கள் :**

கருவறையைச் சுற்றிலும் தெற்குப் புறத்தில் நான்கும், மேற்கில் ஆறும் வடக்குப்புறத்தில் நான்கும் என மொத்தம் 14 தேவகோட்டங்கள் உள்ளன.

**அரைத்தூண்கள்:**

தூண்கள் கட்டடக்கலையின் ஒரு சிறப்பம்சமாகும். தேவக்கோட்டத்தின் இருபுறமும் அரைத்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தூண்களில் கீழிலிருந்து மேலாக முறையே தண்டு, பத்பபந்தம், கலசம், தாடி கும்பம், பாலி போன்ற அங்கங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. பாலி போன்ற அமைப்பு முற்காலம் சோழர் கலைப்பாணியில் காணப்படக்கூடிய ஒன்றாகும். இவ்வமைப்பே பிற்காலத்தில் மிகவளர்ந்து வளைந்து தொங்கிய நிலையில் ‘இதழ்’ என்று அழைக்கப்படுகின்றது.

**பிரஸ்தரம் :**

கருவறை சுவற்றின் மேல் மூடும் கூரைபோன்ற அமைப்பே பிரஸ்தரம் எனப்படும். பிரஸ்தரத்தில் கபோதகம் அமைந்துள்ளது. அதன் உட்பகுதியில் யாளி வரிசை அமைக்கப்பட்டுள்ளது. பிரஸ்தரம் மற்றும் கபோததத்திற்கு இடையே கூடு அமைந்துள்ளது. வல்லபை எனப்படும் பகுதியில் பத்மம் காட்டப்பட்டுள்ளது.

**கருவறை விமானம் :**

விமானம் கருவறையின் மேல்தளம் முதல் சிகரம் வரை சுதைகளால் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு தளத்துடன் கூடிய ஏகதளவிமானமாக காட்சியளிக்கிறது. கிரீவக்கோட்டத்தின் நான்கு திசைகளிலும் தெற்கில் தட்சிணாமூர்த்தியும், மேற்கில் திருமாலும் வடக்கில் நான்முகனும், கிழக்கில் இந்திரனும் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளனர்.

**அர்த்த மண்டபம் :**

கருவறையை ஒட்டி பொதுமக்கள் நின்று மூலவரை தரிசிக்கும் இடம் அர்த்த மண்டபமாகும். இது சுமார் 7 அடி நீளம், 10 அடி அகலமும் உடையதாக உள்ளது. இம்மண்டபத்தின் இரு புறங்களிலும் வட்டவடிவத் தூண்கள் சுவரில் பதிந்த நிலையில் உள்ளன.

**முகமண்டபம் :**

அர்த்த மண்டபத்திலிருந்து ஈசனை வணங்கிவிட்டு வெளிவரும்போது நுழையும் இடம் முகமண்டபமாகும். 25 அடி நீளமும் 22 அடி அகலமும் கொண்ட இம்முகமண்டபத்தை ஆறு தூண்கள் தாங்கி நிற்கின்றன.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**மகாமண்டபம் :**

முக மண்டபத்தை அடுத்து மகா மண்டபம் சுமார் 56 நீளமும் 30 அடி அகலமும் கொண்டு 16 தூண்களுடன் காணப்படுகிறது. முக மண்டபத்தை ஒட்டி மகாமண்டபத்தில் இடதுபக்கம் ( மற்ற கோயில்களில் உள்ளதைப் போன்றவாறே) தெற்கு பார்த்த வண்ணம் கருவறை, அர்த்த மண்டபத்துடன் கிரிசுந்தரி அம்மன் கோயில் அமைந்துள்ளது. கருவறையின் மேல் விமானம் காணப்படுகிறது.

**அம்மன்கோயிலின் அதிட்டான அமைப்பு :**

மூலவர் கருவறையின் அதிட்டான அமைப்பும் அம்மன் சன்னதியின் அதிட்டான அமைப்பும் வேறுபட்டு காணப்படுகின்றன. சில கோயில்களில் அட்டானத்தின் கீழ் உபபீடம் என்னும் பகுதி காணப்படும். இப்பகுதி கட்டித்தின் உயரத்தை அதிகப்படுத்துவதற்கும் அலங்கரிக்கவும் நீட்டித்துக்கொண்டே செல்வர். அவ்வகையில் இச்சன்னதியில் உபபீடம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**உள் திருச்சுற்று :**

இத்திருச்சுற்றானது தென்மேற்காக சுமார் 140 அடி நீளமும் 80 அடி அகலமும் கொண்டுள்ளது. இச்சுற்றின் நான்கு புறமும் மண்டபங்கள் அமைந்துள்ளன.

**உள் கோபுரம் :**

உள் திருச்சுற்றை அடுத்து வெளிவரும் வழியில் இரண்டாவது கோபுர நுழைவுவாயில் அமைந்துள்ளது. இது சற்றேறக்குறைய 30 அடி உயரம் உடையதாகும். ஒரே நிலையினையுடைய இக்கோபுரம் உயரத்திலும் அளவிலும் தஞ்சை பெருவுடையார் கோயிலின் குட்டைக் கோபுரத்தைப் போன்று மிகச்சிறியதாகக் காணப்படுகிறது.

**மேற்கு நுழைவு வாயில் கோபுரம் :** இத்திருக்கோயிலின் பின்புறம் மேற்கு திசையில் நான்கு நிலைகளையுடைய கோபுரம் அமைந்துள்ளது. இது சுமார் 40 அடி உயரம் உடையது இது தற்பொழுது சிதிலமடைந்த நிலையில் உள்ளது.

**முதல் கோபுரம் :**

ஐந்து நிலைகளைக் கொண்டுள்ளஇக்கோபுரம் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இது சுமார் 80 அடி நீளமும் 25 அடி அகலமம் 50அடி உயரமும் உடையதாகும். உபபீடம் உயரத்தை அதிகரித்துக் காட்டுவதற்காக உயர்த்தப்பட்டுள்ளது. பத்மம், கண்டம், கலபாதம், கபோதம், கபோதத்திற்கு மேல் பட்டிகை, ஜகதி, உட்கண்டம், முப்பட்டைக் குமுதம், காந்தம், அக்ரபட்டியல் போன்ற வடிவக்கூறுகளுடன் அதிட்டானம் காணப்படுகிறது. கோபுரத்தின் மேலேயுள்ள கிரீவப்பகுதிகளில் சிற்பங்கள் பல அணிவகுக்கின்றன. கிரீவத்தை அடுத்துள்ளசிகரம் சாலச்சிகர வடிவில் அமைந்துள்ளது. சாலையின் ஓரங்களில் மகாநாசிகைத் தோரணங்களும், கீர்த்தி முக அமைப்பும் காணப்படுகிறது. கோபுரம் முழுவதும் சுதைச் சிற்பங்களால் அலங்கரிக்கப் பட்டுள்ளது.

**கல்வெட்டுகள்**

நல்லூர் கல்யாண சுந்தரர் கோயிலில் இருக்கும் கல்வெட்டுகளை மந்திய மாநில தொல்லியல்


அண்ணா பல்கலைக்கழகம், சென்னை
(பொறியியல் தொழில்நுட்ப தமிழ் வளர்ச்சி மையம்,
கட்டிடக்கலைத்துறை & கட்டுமானத்துறை)
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
(கட்டடக்கலைத்துறை) மற்றும்
பிரணவ் நுண்கலை ஆய்விதழ்
இணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கம்
' தமிழரின் கட்டடக்கலை தொழில்நுட்பம் "
Special Issue - Volume -2 Issue -2

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

துறைகள் படியெடுத்துள்ளனர். 23 கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. கருவறைத் தென்புறச்சுவரில் மாடக்கோயிலில் உள்ள தொன்மையான கல்வெட்டு உள்ளது. இறைவன் பெயர் "நல்லூர் மகாதேவன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**சிற்பங்கள்**

**மூலவர் –**


இத்திருக்கோயிலின் கருவறைக்குள் மூன்றரைக்கு இரண்டு அடி என்ற நீள சதுர வடிவில் ஆவுடையும் அதன்மேல் 2 அடி உயர பாண லிங்கமும் உள்ளது. இம்மூலவர் சுயம்பு லிங்கம் என்றழைக்கப்படுகிறது. சிவலிங்கமானது ஒவ்வொரு நாளும் ஐந்து நேரங்களில் ஐந்து நிறங்களில் காட்சி அளிக்கிறது. தாமிரம், இளஞ்சிவப்பு, பொன்னிறம், உருகிய தங்கம், நவரத்தின பச்சை என மாறிமாறி காட்சி அளிப்பதால் பஞ்சவர்ணேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார். மூலவருக்கு பின்புறம் இதன் மேற்குச் சுவரில் கல்யாண சுந்தரர் கிரிசுந்திரி படிமங்கள் சுதைவடிவில் காணப்படுகிறது. கிரிசுந்தரி அம்மன் (என்கிற) கல்யாணசுந்தரி தெற்குப் பார்த்தவாறு அருள்பாலிக்கிறார். இத்திருக்கோயில் நான்கு கணபதி படிமங்கள் காணப்படுகின்றன.. அவற்றில் மூன்று கற்சிற்பங்களும் ஒரு செப்புத் திருமேனியும் உள்ளன. இக்கோயில் உள்ள சுமார் இரண்டு அடி உயரமுள்ள முருகன் செப்புதிருமேனி பத்மபீடத்தில் நின்ற நிலையில் 6 தலைகள் 12 கைகளுடன் காட்சியளிக்கிறது. முருகனின் வலது புறம் வள்ளி, இடது புறம் தெய்வாணை படிமங்கள் காணப்படுகிறது.



மூலவர் - கல்யாண சுந்தரேஸ்வரர்




திருக்கோயில் பெயர்ப் பலகை



**நடராஜர் -** சிவனுக்கு வழங்கப்பட்ட பல பெயர்களில் நடராஜர் என்பதும் ஒன்றாகும். எட்டுத் திருக்கரங்களுடன் காணப்படும் **சதுரத் தாண்டவர்** நடராஜ படிமம் இவ்வூருக்கு பெருமை சேர்க்கிறது. நீள் சதுரவடிவ பத்ர பீடத்தின் மேல் முயலகன் அமர்ந்திருக்க அவன் தலைமேல் வலது காலை ஊன்றியும், இடது கால் வலதுகாலைத் தொட்டவாறும் சதுர தாண்டவ



அண்ணா பல்கலைக்கழகம், சென்னை
(பொறியியல் தொழில்நுட்ப தமிழ் வளர்ச்சி மையம்,
கட்டிடக்கலைத்துறை & கட்டுமானத்துறை)
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
(கட்டடக்கலைத்துறை) மற்றும்
பிரணவ் நுண்கலை ஆய்விதழ்
இணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கம்
' தமிழரின் கட்டடக்கலை தொழில்நுட்பம் "
Special Issue - Volume -2 Issue -2

கோலத்தில் மற்றொரு செப்புப்படிமம் அமைக்கப் பட்டுள்ளது. இப்படிமம் கி.பி. 10 நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம் என்று பி.ஆர். சீனிவாசன் குறிப்பிடுகிறார்.

உள்சுற்றில் 63 நாயன்மார்கள், கன்னி விநாயகர், முசுகுந்த லிங்கம், சங்கு கர்ண லிங்கம், சுமதி லிங்கம், வர்ண லிங்கம், விஷ்ணு லிங்கம் ஆகிய சிற்பங்கள் உள்ளன. தொடர்ந்து நடராஜர், பைரவர், சனீஸ்வரர், சூரியன், சந்திரன், மகாலிங்கம் , வனலிங்கம், ஜ்ஒரஹரேஸ்வரர், ஜ்ஒரஹரேஸ்வரி கோஷ்ரத்தில் தட்சிணாமூர்த்தி, உச்சிஷ்டகணபதி, கைலாய கணபதி ஞான தட்சிணாமூர்த்தி ஆகியோர் உள்ளனர். திருச்சுற்று மண்டபத்தில் உமாமகேசுவரர் சங்கர நாராயணர் , லிங்கோத்பவர், சுஹாசனர், நடராஜர், ரிஷபாரூடர் உள்ளிட்ட சுதைச்சிற்பங்கள் காணப்படுகின்றன. குந்திதேவிக்கும் அமர்நீதிநாயனாருக்கும் சிற்பங்கள் அமைக்கப் பட்டுள்ளன. வெளிச்சிற்றில் நந்தவனம், மடப்பள்ளி, அஷ்ட புஜ மகாகாளியம்மன் சன்னதி ஆகியவை உள்ளன.

**தல சிறப்புகள்**

திருநாவுக்கரசருக்கு திருவடி சூட்டியதால் பக்தர்களுக்கு பெருமாள் கோயிலைப்போல சடாரி வைக்கும் வழக்கம் இங்குள்ளது. அமர்நீதி நாயனாரை சிவன் இத்தலத்தில் ஆட்கொண்டார். குந்திதேவி தன் தோஷம் நீங்க இத்தலத்தில் உள்ள சப்தசாகரதீர்த்தத்தில் நீராடினாள். அகத்தியருக்கு இறைவன் திருமணக் காட்சியைக் காட்டி அருளினார்.

**முடிவுரை :**

ஆதிசேஷனுக்கும் வாயுபகவானுக்கும் நடந்த சண்டையின்போது கயிலை மலையிருந்து வாயுவால் தூக்கி எறியப்பட்ட சிகரங்களில் ஒன்று இத்தலம் என்பதால் சுந்தரகிரி எனப்படுகிறது. இங்கு வில்வமரத்தடியில் சுயம்பு லிங்கமாக இறைவன் தோன்றினார்.திருவாரூரில் தற்போது வீற்றிருக்கும் வீதிவிடங்க தியாகராஜ பெருமானை முசுகுந்தன் இந்திரனிடமிருந்து பெற்று இறைவனின் அருளின்படி இத்தலத்தில் மூன்று நாட்கள் வைத்து பூசை செய்து பின்னரே திருவாரூரில் பிரதிஷ்டை செய்தார். நவக்கிரக சன்னதி இல்லாத சிவதிருத்தலம் இதுவாகும். கடவுள் வழிபாட்டு முறைகளின் மூலம் உருவான புராணங்கள் தந்த கடவுளர்களின் திருவுருவங்களைப் படிமக் கலைமூலம் சிற்பங்கள் ஆக்கி அவற்றைக் கல்லாகக் காணாமல் கடவுளாகப் பார்ப்பதாலேயே தமிழர்கள் இன்றும் உருவ வழிபாட்டைக் கையாண்டு வருவதை உணர முடிகிறது.

இக்கோயிலின் கட்டடக்கலைப் பாணியானது பல்வேறு காலக்கட்டங்களில் வளர்ச்சி பெற்று வந்துள்ளதை அறிய முடிகிறது. சோழர், ஒய்சாளர் என்று பல்வேறு மன்னரது ஆட்சிகாலங்களிலும்ம தனித்தனிச் சன்னதிகளையும் திருச்சுற்றுக்களையும் கோபுரங்கயையும் மதில் சுவர்களையும் எடுப்பித்துள்ளதைக் காணமுடிகிறது.

இக்கோயிலின் வளர்ச்சியானது இன்றளவும் தொடர்ந்து கொண்டுதான் உள்ளது. பற்பல திருப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**அடிக்குறிப்புகள்:**

8 வரி பதிகம் திருஞானசம்பந்தர் தேவாரம் இரண்டாம் திருமுறை 57வது 1.

40 வரி பதிகம் திருஞானசம்பந்தர் தேவாரம் இரண்டாம்திருமுறை 57வது 2.

தலவரலாறு,ப.5. சிவகுருநாதப்பிள் திருநல்லூர்த் 3.